විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions
පරපුරක අභිමානය
தலைமுறையொன்றின் பெருமிதம்
Pride of a Generation

මගේ අංකය / எனது இல. / My No. } ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதம் : 07 / 2023 (திருத்தம் I)
ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................
දිනය / திகதி / Date } 2024.01.08

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்

அனைத்து பிரதேச செயலாளர்கள்

**<u>ஓய்வூதியர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழ் - 2024</u>**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பில் 2023.11.30 ஆம் திகதிய 07/2003 ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல் கடிதத்தின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. மேலே குறிப்பிடப்பட்ட சுற்றிக்கையின் 2 (அ) ஆம் பந்தியின் iv உப பந்தி இதன் மூலம் பின்வரும் முறையில் திருத்தப்படுகிறது.

> உயிர்வாழ்ச் சான்றிதழை விரல் அடையாளம் மூலமாக சமர்ப்பிக்க பதிவு செய்துள்ள ஓய்வூதியர்கள் கிராம அலுவலரிடம் சென்றால், அவர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழை விரல் அடையாளத்தின் மூலம் வழங்குவதற்கான வசதிகளைப் பெறக்கூடிய வங்கியின் கிளைக்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ அவர்களை அனுப்பி வைக்குமாறு கிராம அலுவலருக்கு அறிவுறுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட முறையில் பதிவு செய்துள்ள ஓய்வூதியர்கள் விரல் அடையாளத்தை வழங்குவதில் சிரமத்தை எதிர்கொண்டால் அல்லது வங்கியின் கிளை அல்லது பிரதேச செயலகத்திற்குச் செல்வதில் சிரமம் இருந்தால், அச்சந்தர்ப்பத்தில் இணைப்பு 01 இல் உள்ள மாதிரியின்படி அவர்களின் உயிர்வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பிப்பதற்கான வசதிகளை சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் ஏற்படுத்த வேண்டும்.

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

03. கிராம சேவையாளர் பிரிவுகளின் மட்டத்தில் உயிர்வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டிய அனைத்து ஓய்வூதியர்களின் விவரங்களையும், விரல் அடையாள வடிவில் தங்கள் உயிர்வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பிக்க பதிவு செய்த அனைத்து ஓய்வூதியர்களின் விவரங்களையும் ஓய்வூதியத் திணைக்களத்தின் 'ஓய்வூதிய முகாமைத்துவ முறைமையிலிருந்து' (Pension Management System) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி. டயஸ்**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்**

**பிரதிகள்:**

1. செயலாளர், பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.த.த